நகல்:-

# தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

ஆட்சிமொழி - அரசு அலுவலகங்களில் தமிழ்த்திட்டச் செயலாக்கம் - ஊக்கமும் ஆர்வமும் திறமையும் காட்டும் அரசுப்பணியாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

தமிழ் வளர்ச்சிப்பண்பாட்டுத்(தவ-2-1) துறை

அரசாணை (நிலை) எண்.371

நாள்:- 31.10.89
திருவள்ளுவராண்டு 2020 சுக்கில
ஐப்பசி 15.

படிக்க:-

1. அரசாணை(நிலை) எண்.251, தமிழ்வளர்ச்சி-பண்பாட்டுத்துறை, நாள் 31.7.87.
2. தமிழ்வளர்ச்சி இயக்குநர் கடிதம் ந.க.எண்.8899/84/இ2 நாள் 16.4.85 மற்றும் 19.7.89.

-----

ஆணை:

----

தமிழ் ஆட்சிமொழித்திட்டத்தை அரசு அலுவலகங்கள், மாநகராட்சி அலுவலகங்கள், தன்னாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் செயற்படுத்துவதில் ஊக்கமும், ஆர்வமும், திறமையும் கொண்ட அரசுப்பணியாளர்களை ஊக்குவிப்பதன் பொருட்டுப்பரிசும் - பாராட்டுரையும் வழங்கும் திட்டத்தை மீண்டும் செயற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இதன் தொடர்பாகத்தமிழ்வளர்ச்சி இயக்குநரின் செயற்குறிப்புக்களை அரசு ஆராய்ந்து பின்வரும் ஆணையை வெளியிடுகின்றது.

2. அரசு அலுவலகங்கள், தன்னாட்சி நிறுவனங்கள், மாநகராட்சிகள் ஆகியவற்றில் பணியாற்றும் அரசுப்பணியாளர்களை ஊக்குவிப்பதற்காகவும், ஆட்சி மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்தும் ஆர்வம், திறமை ஆகியவற்றை பாராட்டு முகத்து மொத்தம் ரூ.64,000/-செலவில்(ரூபாய் அறுபத்து நான்காயிரம் மட்டும்) பரிசு வழங்கும் இத்திட்டத்தைச் செயற்படுத்திட அரசு ஆணையிடுகிறது. இத்திட்டம் 1989.90 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் செயற்படுத்தப்படும். ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் பின்வருமாறு பரித்து வழங்கப்படுகிறது.

1) சென்னை நகர்:

அ) தலைமைச் செயலகம்
ஆ) துறைத்தலைமை அலுவலகங்கள்
இ) மாவட்டாட்சியர் அலுவலகம்
ஈ) மாநகராட்சி அலுவலகம்
உ) தன்னாட்சி நிறுவனங்கள்

மேற்கண்ட ஒவ்வொரு அமைப்பிற்கும் ரூ.1000/-வீதம் (5 X 1000 = 5,000) — ரூ.5,000/-

2) ஒரு மாவட்டத்திலுள்ள;

அ) மாவட்டாட்சியர் அலுவலகங்கள்
ஆ) சார்நிலை அலுவலகங்கள்
இ) தன்னாட்சி நிறுவனங்கள்

இவற்றிற்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.3,000/- வீதம் மொத்தம் 19 மாவட்டங்களுக்கு (ரூ.3000 X 19 = 57,000) — ரூ.57,000/-

3. மதுரை, கோவை மாநகராட்சிகளுக்கு ரூ.1000/-வீதம்(1000X2.. 2000) — ரூ. 2,000/-

மொத்தம் ரூ 64,000/-

.....

3. மேலே குறிப்பிடப்பட்ட செலவினத்தில் ஒவ்வொரு அமைப்பிலும் ரூ.500, ரூ.300 மற்றும் ரூ.200 என்ற அளவில் முறையே முதல், இரண்டாம் மூன்றாம் பரிசுகளை மூன்று இனங்கள் பிரித்து வழங்க வேண்டும். பரிசுக்குரிய அரசு பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் முழுப்பொறுப்பும் தமிழ்வளர்ச்சி இயக்குநரைச்சார்ந்ததாகும் தேர்வுக்குரிய நடைமுறைகளைத்தமிழ்வளர்ச்சி இயக்குநர் வகுத்துக்கொள்வார்.

4. மேலே பத்தி 1 இன்படி ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத்தலைப்பின்கீழ் பற்றுவைக்கப்படவேண்டும்.

> " 2202. பொதுக்கல்வி-05. மொழி வளர்ச்சி-001. நெறிப்படுத்துதல் நிர்வகித்தல்-1 திட்டத்தில் சேராதது - ஏஏ தமிழ்வளர்ச்சி இயக்கம்-ஏனைய செலவுகள் -1, ரொக்கப்பரிசு" (தொ.கு.எண். 2202 05-001 2610)).

நடப்பு நிதியாண்டில் கூடுதல் செலவினத்திற்காக 1989.90 ஆம் ஆண்டின் திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டில் செலவினங்களுக்கான நிதியொதுக்கம் மேற்கொள்ளப்படும் எனவே, இதுகுறித்த செயற்குறிப்புக்களைத்தக்க சமயத்தில் அரசுக்கு அனுப்பிவைக்குமாறு தமிழ்வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. அலுவல் சார்பற்ற எண். 4742/எப்எஸ்/பி/89 நாள் 3.10.89 குறிப்பிட்ட நிதித்துறையின் இசைவு பெற்று இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஔவை நடராசன்
அரசு செயலாளர்.

பெறுநர்:-

....

....

ஆணையர் மாநகராட்சி சென்னை, மதுரை, கோவை.

/உண்மை நகல்/

Roc.No.107219/89/C24 — Coimbatore Corporation, Coimbatore
Dated: 10.11.89.

Communicated to Heads of departments and section Heads for information and necessary action.

For Commissioner.

ps/